# FMSE - CHENNAI
FORUM FOR MICRO & SMALL ENTERPRISES - CHENNAI
(A Unit of Puthiya Thalaimurai Foundation)

புதிய தலைமுறை அறக்கட்டளை சுயதொழில் மன்றத்தின் மூலம் ஜனவரி 18 & 19, 2019 ஆகிய இருதினங்கள் காஞ்சிபுரம் மாவட்டம், நாவலூரில் உள்ள நத்தம் கோழி பண்ணையில் (Oferr Nallayan Research Centre) சுருள்பாசி வளர்ப்பு, ஒருங்கிணைந்த பண்ணையம் மற்றும் கால்நடை வளர்ப்பு ஆகிய தலைப்புகளில் பயிற்சி முகாம் நடைபெற்றது.

18 ஜனவரி 2019 அன்று காலை 11.00 மணியளவில் முகாம் தொடங்கியது. முதலில் ச.சுரேஷ்கண்ணன், முதுநிலை திட்ட மேலாளர், புதிய தலைமுறை அறக்கட்டளை சுயதொழில் மன்றத்தின் பணிகள், கடந்து வந்து பாதை, நடத்தி வரும் நிகழ்ச்சிகள் குறித்தும், மற்றும் பயிற்சியாளர் இரத்தினராஜசிங்கம் அவர்களை அறிமுகப்படுத்தி வைத்தார். பின்னர் வி.சந்திரசேகரன், ஆலோசகர், புதிய தலைமுறை அறக்கட்டளை சுயதொழில் மன்றத்தில் இணைவதின் மூலம் ஏற்படும் நன்மைகள் சுயதொழில் மன்றத்தின் நிகழ்ச்சிகள் குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்.



**திரு. ச.சுரேஷ்கண்ணன், முதுநிலை திட்ட மேலாளர்,**
புதிய தலைமுறை அறக்கட்டளை
அவர்கள் வரவேற்புரையாற்றிய காட்சி



**திரு. வி.சந்திரசேகரன், ஆலோசகர்,**
புதிய தலைமுறை அறக்கட்டளை
அவர்கள் சிறப்புரையாற்றிய காட்சி

பின்னர் இரத்தினராஜசிங்கம், பயிற்சியாளர், Oferr Nallayan Research Centre அவர்கள் பேசுகையில் சுருள்பாசி என்றால் என்ன? என்று முதலில் நாம் அறிந்து கொள்ள வேண்டும். சுருள்பாசி ஸ்பைருலீனா என்ற பெயரில் அழைக்கப்படுகிறது. இது ஒரு நுண்ணிய, நேரடியாக கண்ணுக்குத் தெரியாத நீலப்பச்சை நிறமுடைய நீரில் வாழும் தாவரம் ஆகும். இது இயற்கையிலேயே பல ஊட்டச்சத்துக்கள் நிறைந்த ஒரு தாவரமாகும். இந்த சுருள் பாசியில் 55.65% புரதச் சத்து உள்ளது..உடல் ஆரோக்கியத்துக்குத் தேவையான புரத சத்தை மிகுதியாகக் கொண்டுள்ள ஸ்பைருலினா சுருள்பாசியைக் குறைந்த செலவில் வளர்த்து, அதிக வருமானத்தைப் பெறலாம்.

புரத சத்து மிகுந்த ஸ்பைருலினாவில் 15 வகைகள் உள்ளன. தமிழக சூழலுக்கு ஏற்றவை ஸ்பைருலினா மேக்ஸிமா, ஸ்பைருலினா பிளான்டெனிஸ். இயந்திரங்களைக் கொண்டு பெரு

நிறுவனங்கள் மூலம் வளர்ப்பதற்கு மேக்ஸிமா வகை ஏற்றது. சிறு தொழில் மூலம் வளர்ப்பதற்கு பிளான்டெனிஸ் வகை உகந்தது.

ஸ்பைருலினாவை விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் பிரதான உணவாக எடுத்துக்கொள்வது குறிப்பிடத்தக்கது. பாசியை உற்பத்தி செய்து பல வழிகளில் விற்பனை செய்யலாம். கால்நடைகளுக்குத் தீவனமாகக் கொடுப்பதன் மூலம் அதிக வருமானத்தை ஈட்ட முடியும். சுருள்பாசி வளர்ப்பதன் மூலம் நல்ல லாபம் ஈட்டலாம். இது வழுக்குகின்ற பாசியில்லை வாழ வைக்கிற பாசி  இதை மதிப்புக் கூட்டப்பட்ட பொருளாகவும் மாற்றலாம், தாய்ப்பாசியாகவும் விற்கலாம். பின்னர் வளர்ப்பு முறைகள், தேவையான பொருள்கள், பாசி எடுக்கும் முறைகள் குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார். பின்னர் பயிற்சியாளர்களை சுருள் பாசி வளர்ச்சி மையத்திற்கும் நேரடியாக அழைத்துச் சென்று விரிவாக விளக்கம் அளித்தார்.

**பாசியில் கொழிக்குது பலன்! இது வழுக்குகிற பாசியில்லை வாழ வைக்கிற பாசி.**



பயிற்சியாளர் **திரு. இரத்தினராஜசிங்கம்**
அவர்கள் சுருள் பாசி குறித்து விளக்கிய காட்சி



**திரு. எல். இராமதாஸ்,**
Deputy Commissioner of Police, (Retd), சென்னை
அவர்கள் ஒருங்கிணைந்த பண்ணையம் குறித்து விளக்கிய காட்சி

முதல் நாள் மதியம் 2.00 மணியளவில் காஞ்சிபுரம் மாவட்டம் செய்யாறில் ஒருங்கிணைந்த பண்ணையை பராமரித்து வரும் எல். இராமதாஸ், Deputy Commissioner of Police, (Retd), சென்னை அவர்கள் பேசுகையில் விவசாயிகளை ஒருபோதும் கைவிடாமல் வாழவைப்பது, இயற்கை விவசாயமும் ஒருங்கிணைந்த பண்ணையமும்தான். இதைத்தான் மறைந்த 'இயற்கை வேளாண் விஞ்ஞானி' நம்மாழ்வார், தன் வாழ்நாள் முழுக்க வலியுறுத்தி வந்தார். 'ஜீரோ பட்ஜெட் பிதாமகர்' சுபாஷ் பாலேக்கரின் கருத்தும் இதுவே! இடுபொருட்கள் செலவு குறைவு, பராமரிப்பு எளிது, வேலையாட்கள் குறைவு, சத்தான மகசூல், கடனற்ற வாழ்வு என்பதே இதன் முக்கிய காரணிகளாக இருக்கின்றன. விவசாயிகள் ஆடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு... என மாற்றுத் தொழில்களையும் செய்ய முன்வர வேண்டும். அப்போதுதான் அதிக வருமானம் எடுக்க முடியும்' பல விவசாயிகள் விவசாயத்தோடு ஆடு, கோழி என சேர்த்து ஒருங்கிணைந்த பண்ணை அமைத்து நல்ல லாபம் ஈட்டி வருகிறார்கள் என்றும் பல்வேறு பயனுள்ள தகவல்களை கூறினார்.

இரண்டாம் நாள் 19.1.2019 அன்று காலை 10.00 மணியளவில் முனைவர். கே. ஜானகி, Assistant Professor, Vetenary Department, Krishi Vigyan Kendra, Kattupakkam அவர்கள் கால்நடை வளர்ப்பு குறித்து பேசுகையில் ஒருங்கிணைந்த பண்ணையத்தில் கால்நடை வளர்ப்பு ஒரு முக்கிய அங்கமாகும். உழவுத்தொழிலும், கால்நடை வளர்ப்பும் ஒன்றை ஒன்று சார்ந்த தொழில்களாகும். கால்நடை வளர்ப்பு விவசாயக் குடும்பத்தின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்வதுடன் வீட்டு வருமானத்தையும் அதிகரிக்கிறது. பண்ணை மற்றும் வீடுகளில் உள்ள கழிவுப் பொருட்களை கால்நடைகளுக்கு உணவாகப் பயன்படுத்துவதால் பால் உற்பத்தி செலவு குறையும். கால்நடைகள், மனிதனுக்கு உணவு, எரிபொருட்கள், உரம், தோல் மற்றும் இழுவை சக்தி போன்றவற்றை வழங்குகின்றன.

தமிழகம் கால்நடை வளர்ப்பு மற்றும் உற்பத்தியில் மற்ற மாநிலங்களை விட முன்னிலை வகிக்கிறது. மேலும் கறவை மாடு, கோழி வளர்ப்பு, காடை வளர்ப்பு, ஆடு வளர்ப்பு மற்றும் பராமரிக்கும் முறைகள் அவற்றின் மூலம் வருமானம் ஈட்டும் வழிமுறைகள் குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்.



**முனைவர். திருமதி. கே. ஜானகி, Assistant Professor,** Vetenary Department, Krishi Vigyan Kendra, Kattupakkam அவர்கள் கால்நடை வளர்ப்பு குறித்து விளக்கிய காட்சி



**விவசாயி திரு. வி. பாலாஜி** அவர்கள் பசுந்தீவனம் குறித்து விளக்கிய காட்சி

இறுதியாக காஞ்சிபுரம் பிள்ளையார் பாளையம் கிராமத்தில் பாலாஜி முத்து ஒருங்கிணைந்த பண்ணையை நடத்திவரும் விவசாயி வி. பாலாஜி பேசுகையில் ஒருங்கிணைந்த பண்ணையத்தில் அசோலாவை உற்பத்தி செய்து பசுந்தீவனம் மற்றும் வேளாண் பயிர்களுக்கு ஒரு சிறந்த இயற்கை உரமாகப்பயன்படுத்தலாம். அத்துடன் அசோலா, இரசாயன உரமில்லா ஒரு மாற்றுத்தீவனமாக விளங்குவதால், அனைத்து வகை கால்நடைகளுக்கும் ஒரு தீவனமாக அமைகிறது.

இறுதியாக முகாமில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட முனைவர். டி.எம். தியாகராஜன், Dean (Faculty of Agricucltural Sciences) SRM Institute of Science and Technology, Kattankulathur பேசுகையில் ஒருங்கிணைந்த பண்ணையத்தில் கால்நடைகளை சிறப்பாகப் பராமரிக்கவும், அதிக வருமானம் பெறவும் தரமான தீவனப்பயிர்களை உற்பத்தி செய்வது மிகவும் அவசியம். பசுந்தீவனத்தைப் பயிர் செய்வதன் மூலம் மண் வளம், மண்ணின் நீர் தாங்கும் சக்தி அதிகரிக்கப்படுகிறது. களை மற்றும் உபயோகமற்ற புல் மற்றும் பூண்டுகளின் வளர்ச்சி

தடுக்கப்படுகிறது என்றும் ஒருங்கிணைந்த பண்ணையின் பயன்களை குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார். இந்நிகழ்ச்சியில் 19 நபர்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டனர். இறுதியாக பயிற்சி முகாமில் கலந்து கொண்டவர்களுக்கு சான்றிதழை வழங்கி பயிற்சியாளர்களுடன் நாவலூர் பண்ணையை முழுமையாக பார்வையிட்டார்.




**முனைவர். திரு. டி.எம். தியாகராஜன்**
**Dean (Faculty of Agricucltural Sciences)**
**SRM Institute of Science and Technology,**
Kattankulathur, அவர்கள் சான்றிதழ்களை வழங்கிய காட்சி



பயிற்சியாளர்கள் பண்ணையை பார்வையிட்ட காட்சி